## ஆகமங்கள்

- ஆகமம் என்பதன் பொருள் -ஆன்மாக்களின் பாசம் நீக்கி முக்தியருளல் என்பதாகும்.
- இறைவனின் 5 முகத்திலிருந்து 28 ஆகமங்கள் தோன்றின எனக் கூறுவது - காரணாகமம்.
- 28ஆகமங்களில், 10 சிவபேதங்கள், 18 ருத்ரபேதங்களாகும்.
- உப ஆகமங்கள் மொத்தம் 207.
- திரிலோனசிவாசாரியார் இயற்றிய நூலின் பெயர் - சித்தாந்தசாராவளி (ஆகமங்களின் பொருட்களை வரிசைப்படுத்தி சுருக்கமாக கூறுகிறது).
- சித்தாந்தசாராவளியின் உரையாசிரியர் - அனந்த சிவாச்சாரியார்.

| இறைவனின் முகங்கள் | ஆகமங்களின் பெயர்கள் | | |
|---|---|---|---|
| சத்யோஜாத முகம் (படைப்பு) | காமிகம் | காரணம் | சிந்தியம் |
| | யோகஜம் | அஜிதம் | |
| வாமதேவ முகம் (காத்தல்) | தீப்தம் | சூக்ஷ்மம் | சஹஸ்ரம் |
| | அம்சுமான் | சுப்ரபேதம் | |
| அகோர முகம் (அழிப்பு) | விஜயம் | நிச்வாசம் | சுவாயம்புவம் |
| | அநலம் | வீரம் | |
| தத்புருஷ முகம் (மறைப்பு) | ரௌரவம் | மகுடம் | பிம்பம் |
| | விமலம் | சந்திரஞானம் | |
| ஈசான முகம் (அருளல்) | சந்தானம் | சர்வோக்தம் | பரமேஸ்வரம் |
| | கிரணம் | வாதுளம் | |

•விஷ்ணுவை பரதேவதையாக வைத்து கூறுவது- வைணவாகமங்கள்.

•வைணவாகமங்கள் இருவகைப்படும். 1)பஞ்சராத்ராகமம் 2)வைகானாஸாகமம்

•பலரிஷிகள் மூலம் உபதேசிக்கப்பட்டது - பஞ்சராத்ராகமம்

•மேலக்கோட்டை நாராயணபுரம், காஞ்சி, ஸ்ரீரங்கம் ஆகிய கோவில்களில் நடைபெறும் பூஜை முறை -- பஞ்சராத்ராகமம்.

•திருப்பதி கோவிலில் நடைபெறும் பூஜை முறை- வைகானாஸாகமம்

•வைகானாஸாகமத்தை உபதேசித்தவர் - விகனஸர்.

•ஆகமங்களில் சொல்லப்படுபவைகளில் முக்கியமானவை - மந்திரம், தந்திரம்

•சைவாகமங்களின் சரியை, கிரியை, யோக, ஞான பாதங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே தகவல்களை தருகின்றன.

•சரியை - பூஜைப்பொருள் சேகரித்தல், பூஜை முறைகள் பற்றி கூறுகிறது.

•கிரியை - பூஜை, திருவிழா, சமய விசேஷம் பற்றி கூறுகிறது

•யோகபாதம் - ஆன்ம சுத்தி, அந்தர்யாகம் பற்றி கூறுகிறது

•ஞான பாதம் - பதி, பாச லட்சணங்களைப் பற்றி கூறுகிறது.

WhatsApp Group -ல் சேர – கிளிக் செய்யவும்

Facebook Examsdaily Tamil – FB ல் சேர – கிளிக் செய்யவும்

Telegram Channel கிளிக் செய்யவும்